“ විශිෂ්ඨ රාජ්‍ය සේවාවක් සඳහා අැප කැපවෙමු ”

ප්‍රධාන ලේකම් කාර්යාලය - බස්නාහිර පළාත

பிரதான செயலாளர் அலுவலகம் - மேல் மாகாணம்

OFFICE OF THE CHIEF SECRETARY - WESTERN PROVINCE

204, ඩෙන්සිල් කොබ්බෑකඩුව මාවත, බත්තරමුල්ල.
204, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, பத்தரமுல்ல.
204, Denzil Kobbekaduwa Mawatha, Battaramulla.

ප්‍රධාන ලේකම් / பிரதான செயலாளர் / Chief Secretary
දුරකථන / தொலைபேசி / Telephone - 011 - 2092599
ෆැක්ස් / பெக்ஸ் / Fax - 011 - 2092601
ඊ-මේල් / மின்னஞ்சல் / E-mail - chiefsecretary@wpc.gov.lk

පොදු දුරකථන / தொலைபேசி இலக்கம் / General Telephone 011 - 2093000

ISO/IEC: 17021
QMS-001-01

මගේ අංකය / எனது இலக்கம் / My No. CSWP/ADM/18-38/FI/01-2019 ඔබේ අංකය / உமது இலக்கம் / Your No.

දිනය / திகதி / Date 2019/05/09

ஆளுநர் செயலாளர் (மே.மா.),
செயலாளர், மாகாண அரச சேவை ஆணைக்குழு (மே.மா.),
சபைச் செயலாளர் (மே.மா.),
அனைத்து அமைச்சுக்களதும் செயலாளர்கள் (மே.மா.),
பிரதிப் பிரதான செயலாளர் (நிர்வாகம்/ ஆளணி மற்றும் பயிற்சி/ நிதி/ திட்டமிடல்/ பொறியியல்),
மாகாண வருமான ஆணையாளர் (மே.மா.),
பிரதான உள்ளகக் கணக்காய்வாளர் (மே.மா.),
நிர்வாக அலுவலர் (நிர்வாகம்)
பிரதான செயலாளரின் இணைப்புச் செயலாளர்,

**<u>அரச நிர்வாகச் சுற்றறிக்கை இலக்கம் 32/91(IV), 04/2018(I), 08/2019 மற்றும் அரச நிர்வாகச் சுற்றறிக்கைக் கடிதம் இலக்கம் 01/2019 ஆகியவற்றை மேல் மாகாணத்திற்கு உரித்தாக்கிக் கொள்ளல்.</u>**

அரச நிர்வாக மற்றும் இடர் முகாமைத்துவ அமைச்சின் செயலாளரினால் வெளியிடப்பட்ட கீழ்க்குறிப்பிடப்பட்ட சுற்றறிக்கைகளை மேல் மாகாணத்திற்கு உரியதாக்கிக் கொள்வதற்கு கௌரவ ஆளுநர் அங்கீகாரம் அளித்துள்ளதாக ஆளுநர் செயலாளரின் இலக்கம் GOS/ADM/02/19/01/2019 மற்றும் 2019.05.03 ஆந் தேதியிட்ட கடிதத்தின் மூலம் எனக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. (அச்சுற்றறிக்கைகளின் பிரதி இணைக்கப்பட்டுள்ளது.)

| தொடரிலக்கம் | சுற்றறிக்கை இலக்கம் மற்றும் திகதி | விடயம் |
|---|---|---|
| 01. | அரச நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 32/91 (IV), 2019-03-13 | உள்ளூராட்சித்தாபனங்களிற்கு தேர்தல்கள் மூலம் தேர்வு செய்யப்பட்ட அரசியல் உரிமைகள் உடைய அரச அலுவலர்கள் |
| 02. | அரச நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 04/2018(I), 2019-03-14 | இலங்கை கட்டிடக்கலைஞர் சேவை அலுவலர்களுக்கு பட்டயத் தொழில்சார் கொடுப்பனவை வழங்குதல் |
| 03. | அரச நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 08/2019, 2019-03-28 | தாபனக் கோவை பகுதி II இன் XLVIII அத்தியாயத்தின் 36 ஆம் பிரிவினை திருத்துதல் |
| 04. | அரச நிர்வாக சுற்றறிக்கை கடிதம் இலக்கம் 01/2019, 2019-03-19 | கறுப்புப் பட்டியலிடப்பட்ட அலுவலர்களை மீண்டும் சேவையில் அமர்த்துதல் |

02. அச்சுற்றறிக்கையின்படி செயற்படுமாறும் உங்களின் கீழுள்ள அனைத்து திணைக்களப் பிரதானிகளுக்கும், தாபனப் பிரதானிகளுக்கும் மற்றும் அலுவலர்களுக்கும் தெரியப்படுத்துமாறும் தயவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

கே.என்.சூரியாரச்சி,
உதவிப்பிரதான செயலாளர் (நிர்வாகம்),
பிரதான செயலாளருக்காக (மே.மா.)

*அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை கடிதம் : 01/2019*

*எனது இலக்கம்:* EST-3/DICIP/06/0272
பொது நிருவாக மற்றும்
அனர்த்தமுகாமைத்துவ அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07

*2019.03.19*

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண பிரதம செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்

**<u>கறைநிரற் பட்டியலிடப்பட்ட அலுவலர்களை மீள சேவையில் அமர்த்துதல்</u>**

கறைநிரற் பட்டியலிடப்பட வேண்டிய அரச அலுவலர்கள் தொடர்பான ஏற்பாடுகளை உள்ளடக்கிய அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை ஒழுங்குவிதிக் குறிப்பு *XIX* ஆம் அத்தியாயம் மற்றும் தாபன விதிக்கோவையின் *I* ஆம் வகுதியின் *V* ஆம் அத்தியாயத்தின் *8* ஆம் பிரிவின் பால் தங்களது கவனத்திற்கு கொண்டு வருகின்றேன்.

*02.* அதற்கிணங்க, கறைநிரற் பட்டிலிடப்பட்ட மத்திய அரச அலுவலர்கள் தொடர்பான தகவல்கள் அரசாங்க சேவை ஆணைக்குழு நடைமுறை ஒழுங்குவிதிக் குறிப்பிற்குரிய பின்னிணைப்பின் பிராகரம் அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்கு அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். *2012.12.10* ஆந் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை கடிதம் *08/2012* இன் ஏற்பாடுகள் மற்றும் எனது இலக்கம் *EST-3/DICIP/06/0199* மற்றும் *2019.01.28* ஆந் திகதிய கடிதத்தின் ஆலோசனையின் படி மாகாண பிரதம செயலாளரினால் கறைநிரற் பட்டியலிடப்பட வேண்டிய மாகாண அரச சேவைக்குரிய அலுவலர்கள் தொடர்பான தகவல்கள் தங்களது மாகாண சபைக்கு உரிய நிறுவனத் தலைவர்களிடமிருந்து பெற்றுக்கொண்டு தாபன பணிப்பாளர் நாயகத்துக்கு அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

*03.* அவ்வாறே, அலுவலரொருவரின் பெயர் கறைநிரற் பட்டியலில் இடம்பெற்றிருப்பின் அவர் இறுதியாக வகித்த பதவியை மீள அதே சேவையில் அமர்த்துவதற்கு தடைகள் ஏதுமில்லை. தற்போது கறைநிரற் பட்டியலிடப்பட்டுள்ள அலுவலரொருவரின் பெயர் அதிலிருந்து நீக்க முடிவது நிர்வாக நியாயத் தீர்ப்புச் சபையின் அல்லது வேறு நீதிமன்றமொன்றின் கட்டளையின் அடிப்படையில் அல்லது நியமன அதிகாரி / ஒழுக்காற்று அதிகாரியினால் மாத்திரமேயாகும். அவ்வாறு மீளவும் சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்டதன் பின்னர் அவரின் பெயரை கறைநிரற் பட்டியலிலிருந்து அகற்றுவதற்கு குறித்த அதிகாரியினால் வேண்டுகோளொன்று விடுக்கப்படுதல் வேண்டும்.

*04.* கறைநிரற் பட்டியலிடப்பட்டுள்ள அலுவலரொருவருக்கு மீண்டும் சேவைக்கு வருகை தருமாறு கட்டளையொன்று கிடைக்கப்பெற்றதன் பின்னர் அவ் அலுவலருக்கு சேவைக்கு அறிக்கையிடுமாறு ஆலோசனை வழங்கப்படுதல் வேண்டும் என்பதோடு, அவ்வாறு சேவைக்கு அறிக்கையிட்டதன் பின்னர் அத்திகதியையும் குறிப்பிட்டு நியமன அதிகாரி / ஒழுக்காற்று அலுவலரினால் இணைப்பு *01* இல் உள்ளடக்கப்பட்டுள்ள மாதிரியினை எனக்கு சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் பிரசுரிக்கப்பட்ட கறைநிரற் பட்டியலிலிருந்து அவ் அலுவலரின் பெயரை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

*05.* கறைநிரற் பட்டியலிடப்பட்ட மத்திய அரசினதும் மாகாண அரச சேவையினது அலுவலர்களது பெயர்களை உள்ளடக்கிய கறைநிரற் பட்டியல் *WWW.pubad.gov.lk* என்ற இணையத்தளத்தில் "விசேட அறிவிப்பு" எனும் தலைப்பின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளது.

ஒப்பம்./ ஜே.ஜே. ரத்னசிரி
செயலாளர்
பொது நிருவாக மற்றும் அனர்த்த
முகாமைத்துவ அமைச்சு

**இணைப்பு *01***

<u>**கறைநிரற் பட்டியலிடப்பட்டுள்ள அலுவலர்களின் பெயரினை அகற்றுதல்**</u>

1. *அலுவலரின் முழுப் பெயர்:-*.................................................................................................................................

2. *தேசிய அடையாள அட்டை இலக்கம்:-*.......................................................................................................................

3. *கறைநிரற் பட்டியலிடப்பட்ட சந்தர்ப்பத்தின் போது கடமையாற்றிய அமைச்சு/ திணைக்களம்/ சேவை நிலையம்:-* ..........................................................................................................................................

4. *கறைநிரற் பட்டியலிடும் போது வகித்த பதவி மற்றும் தரம்:-*..............................................................................

5. *அலுவலரின் பெயரை உள்ளடக்கிய கறைநிரற் பட்டியலின் பதிவிலக்கம், திகதி மற்றும் பெயருக்கு உரித்தான தொடரிலக்கம்:-*.......................................................................................................................................

6. *மாகாண அரச சேவையில் / மத்திய அரசின் அலுவலரா என்பது பற்றி:-*...........................................................

7. *மீள சேவையில் அமர்த்துவதற்கு அதிகாரம் வழங்கிய கடிதத்தின் குறிப்பு :-*..................................................
   *(அதிகாரியையும் குறிப்பிட்டிருத்தல் வேண்டும்)*

8. *சேவைக்கு அறிக்கையிட்ட திகதி:-*.............................................................................................................

*மேற்படியான தகவல்களின் படி* .......................................................................................*திரு/திருமதி/செல்வியின் பெயர் கறைநிரற் பட்டியலிலிருந்து நீக்குமாறு தயவுடன் அறியத்தருகின்றேன்.*

*திகதி:-*.................................................

.................................................................................
*ஒழுக்காற்று அலுவலரின் ஒப்பம் மற்றும்*
*உத்தியோகபூர்வ இறப்பர் முத்திரை*